வேலூர், மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்: 3252/ அ3 / 2022 நாள்: .08.2022

பொருள் : வேலூர் மாவட்டம் – கல்வி உதவித்தொகை – PM YASASVI – 9ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை பயிலும் OBC , EBC மற்றும் DNT மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டம் – செயல்படுத்துவது - சார்பாக

பார்வை : வேலூர் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரின் கடித ந.க.எண். என்4/2427/2022, நாள். 24.08.2022

*******

பார்வையில் காணும் கடிதத்திற்கிணங்க பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் (ம) சீர்மரபினர் மற்றும் பொருளதாரத்தில் பின்தங்கிய பிற்படுத்தப்பட்டோர் இனத்தை சார்ந்த மாணவர்களுக்கு PM Yound Achievers Scholarship Award Scheme for Vibrant India (PM YASASVI) இத்திட்டத்தின் கீழ் 9ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை கல்வி பயிலும் மாணவர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் கல்விஉதவித்தொகை வழங்கப்படுகிறது.

**இத்திட்டத்தின அம்சங்கள் பின்வருமாறு –**

1. 9ம் வகுப்பு முதல் 10ம் வகுப்பு வரை கல்வி பயிலும் மாணவர்களுக்கு ரூ.75,000/-ம், 11ம் வகுப்ப முதல் 12ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களக்கு தலா ரூ. 1,25,000/- ம் வழங்கப்படும். (பள்ளி கட்டணம், விடுதி கட்டணம் மற்றும் இதர கட்டணங்களும் இதில் அடங்கும்)
2. இத்திட்டத்திற்கு தகுதியின் அடிப்படையில் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். இதற்கு நுழைவு தேர்வினை தேசிய தேர்வு முகமையால் (National Testing Agency) 11.09.2022 அன்று நடத்தப்பட உள்ளது.
3. இதில் 15000 மாணவர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் பயனடைய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாநிலத்திற்கும் OBC மக்கள் தொகை சதவீதத்தின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
4. இத்திட்டத்திற்கான வழிக்காட்டு நெறிமுறைகள் http://socialjustice.gov.in என்ற இணையதள பக்கத்தில் வழங்கப்பட்டுள்ளது.
5. மேலும், விண்ணப்பங்களை பதிவு செய்ய https://yet.nta.av.in என்ற இணைய தளத்தில் பதிவுகள் மேற்கொள்ள கால நிர்ணய விவரம் 27.07.2022 முதல் 26.08.2022 வரை கால அவகாம் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி இக்கல்வி உதவித்தொகை பெறுவதற்கான தகுதி மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் பின்பற்றி மாணவர்களுக்கு கல்விஉதவித் தொகை பெற தக்க நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – கடித நகல்

//ஒப்பம்//
மாவட்டக் கல்வி
அலுவலர்,
வேலூர்.

பெறுநர்:
தலைமை ஆசிரியர்,
அனைத்து வகை அரசு / அரசு நிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.